## கோபிசெட்டிபாளையம் நகராட்சி

## 30.07.2024 ந் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜூன் 2024-ம் மாதங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்./1015/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண்.897**

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜூன் 2024-ம் மாதங்களுக்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1015/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண்.898**

3. இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் ஜூன் 2024-ம் மாதங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண். 1015 /2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண்.899**

4. இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு அலுவலர் (பொ) அவர்களின் ஜூன் 2024-ம் மாதங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண். 1015 /2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண்.900**

5. இந்நகராட்சி உதவி வருவாய் அலுவலர் அவர்களின் ஜூன் 2024-ம் மாதங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (க.எண். 1015/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண்.901**

6. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2024-25 ஆண்டுக்கான மானிய கோரிக்கையில் பழைய பேருந்து நிலைய வணிக வளாக பகுதியில் புதியதாக வணிக வளாகம் கட்டுவதற்கு உத்தேச மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு கூர்ந்து ஆய்வு பணிகள் (Appraisal) முடிக்கப்பட்டு ரூ.152.00 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட உள்ளது. எனவே, இதற்கு விரிவான மதிப்பீடு தயார் செய்தல், வரைபட ஒப்புதல், வடிவமைப்பு ஒப்புதல், மண் பரிசோதனை சான்று பெற்று தொழிநுட்ப அனுமதி பெற உரிய விரிவான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்வதற்கு தனியார் கலந்தாலோசனர் மூலம் விலை புள்ளி கோரப்பட்டத்தில் பெறப்பட்ட விலைபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2532/2022இ1)

1. Design spectrum – 2.00% of Estimate cost
2. Pavithra Associates – 1.50% of Estimate cost
3. Prorata. .in– Propotion – 1.80% of Estimate cost

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு குறைந்த விலைபுள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு. Pavithra Associates அவர்களின் விலைபுள்ளியை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 . அனுமதிக்கப்பட்டது. 2.ஏற்கப்பட்டது மன்றத்தீர்மான எண். 902**

7. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.24, எல்,ஜி, லேஅவுட் பகுதியில் நமக்கு நாமே திட்டத்தில் பூங்காக்கள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இப்பூங்காவில் LED விளக்குகள் மற்றும் தண்ணீர் வசதி வேண்டி , எல்,ஜி, லேஅவுட் அசோசியேசன், மூலம் விண்ணப்பம் வரபெற்றுள்ளது. மேலும், அவர்கள் தங்கள் அசோசியசன் மூலம் சொந்த செலவில் மேற்கண்ட அடிப்படை வசதிகளை அமைத்து கொள்ள அனுமதி கோரி கடிதம் வழங்கியுள்ளனர். எனவே, இப்பூங்காவில் விளக்குகள் மற்றும் தண்ணீர் வசதி தங்கள் சொந்த பொறுப்பில் செய்துகொள்ளவும், பராமரிப்பு பணிகள் செய்திடவும் எல்,ஜி,லே அவுட் அசோசியேசன் அவர்களுக்கு அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2632/2022/இ1)

**அலுவலக குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உரிய விதிமுறைப்படி நகராட்சியில் ஒப்பந்தம் செய்துகொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.** 903

8. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் உள்ள 2024-2025 முதலாம் அரையாண்டுக்கு சொத்துவரி, காலியிட வரி, தொழில் வரி மற்றும் குடிநீர் கட்டணங்கள் கேட்பு அறிவுப்புகள் (Demand Notice) 25,358 பக்கங்கள் A4 தாள்களில் பிரிண்டிங் எடுத்து தரவும் 2023-2024 ஆம் ஆண்டுக்கான சொத்து வரி, காலியிட வரி, தொழில் வரி மற்றும் குடிநீர் கட்டணங்கள் ஆகிய இனங்களுக்கு நிலுவை மற்றும் நடப்பாண்டுக்கான கேட்பு வசூல் நிலுவை பதிவேடுகள் (Demand Register) 4,647 பக்கங்கள் Legal தாள்களில் பிரிண்டிங் எடுத்து வார்டு வாரியாக தனிதனியாக பைண்டிங் செய்து தரவும்,

இப்பணியினை மேற்கொள்ள உள்ளூர் நிறுவனங்களில் 01.07.2024-ம் தேதி அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டது, அதன் அடிப்படையில் 08.07.2024-ம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை விலைப்புள்ளிகள் வரப்பட்டது, அதன் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.921/2023/அ1)

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மொத்த தொகை |
|---|---|---|
| 1. | LK டிசைனர்ஸ்<br>சௌந்தரபாண்டியன் வீதி, வண்டிப்பேட்டை கோபி. | ரூ. 50,331/- |
| 2. | ஸ்டார் பிரிண்ட மற்றும் ஸ்டேஷனரி<br>59, SDN காலனி, பஸ் நிலையம் பின்புறம், கோபி | ரூ. 47,795/- |
| 3. | மைக்ரோ கம்ப்யூட்டர்ஸ்<br>அண்ணா பாலம், கோபி. | ரூ. 54,395/- |

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 2-ல் குறிப்பிட்டுள்ள ஸ்டார் பிரிண்ட மற்றும் ஸ்டேஷனரி, 59, SDN காலனி, பஸ் நிலையம் பின்புறம், கோபிசெட்டிபாளையம். என்ற நிறுவனத்தின் விலைவிகிதமானது மற்ற இரண்டையும் விட குறைவாக உள்ளது. எனவே அதனை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.** 833

9. கோபிசெட்டிபாளையம் நகராட்சி தற்பொழுது தேர்வு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் 30 வார்டுகள் உள்ளது. மக்கள் தொகை 66000 ஆகும். நகராட்சி பரப்பளவு 7.79 சதுர கிலோ மீடடர். ஆகும். சாலையின் நீளம் 114.81 கிலோ மீட்டர். மேலும் இந்நகராட்சியின் குடிநீர் தலைமை நீரேற்று நிலையம் சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. தற்பொழுது இந்நகராட்சியில் நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு ஒரு ஸ்கார்பியோ வாகனம் மற்றும் நகராட்சி ஆணையாளருக்கு ஒரு பொலிரோ மட்டும் உள்ளது. நகராட்சி பொறியாளருக்கு பயன்படுத்தப்பட்டு வந்த ஜீப் வாகம் எண் TN36F 7005 வாங்கி 21 வருடங்கள் ஆகின்றது. தற்பொழுது 15 வருடங்களுக்கு மேல் வாங்கப்பட்ட வாகனங்களை பயன்படுத்த கூடாது என போக்குவரத்து துறை சார்பில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. எனவே, கடந்த ஒரு வருட காலமாக நகராட்சி பொறியாளருக்கு ஈப்பு வாகனம் இல்லாததால், ஆய்வு கூட்டங்கள் சென்று வருதல் மற்றும் பணிகள் பார்வையிடுதல் உயர் அலுவலர்கள் ஆய்வுக்கு வரும் பொழுது உடன் செல்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, தற்பொழுது நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 35599/2023/எம்ஏ1 நாள் 23.02.2024 ன்படி, தேர்வு நிலை நகராட்சிகளுக்கு நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் ஆகியோருக்கு தலா ஒரு ஸ்கார்பியோ வாகனம் வாங்கி கொள்ளவும், நகராட்சி பொறியாளர் மற்றும் பிற அலுவலர்களுக்கு பொலிரோ வாகனம் வாங்கி கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சிக்கு கூடுதலாக ஒரு ஸ்கார்பியோ வாகனம் வாங்கி கொள்ளவும் ஏற்கனவே உள்ள பொலிரோ வாகனத்தை TN36 AC6320 நகராட்சி பொறியாளருக்கு பயன்படுத்தி கொள்ளவும், ஸ்கார்பியோ வாகனம் வாங்குவதற்கு உண்டான உத்தேச செலவினம் ரூ21,00,000/- இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .(ந.க.எண்.1635/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.** 905

10. கோபிசெட்டிபாளையம் நகராட்சி அலுவலகம் தலைமை சுத்திகரிப்பு நிலையம் நுன் உரம் செயலாக்க மையம் நுன் எரிவாயு கூடம், 30 வார்டுகளில் உள்ள பொது கழிப்பிடங்கள், பூங்காக்கள், ஆகியவற்றில் உள்ள மின் விளக்குகள், மின் விசிறிகள், மின் சாதன பொருட்கள் பழுது ஆகும் பொழுது மீண்டும் அதை பழுது பார்க்க அல்லது மாற்றுவதற்ககும் மற்றும் மாதம் 1 முறை தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் மின் பராமரிப்பு செய்யும் காலங்களில் (EB shutdown) அலுவலகத்திற்கு ஜெனரேட்டர் வசதி ஏற்படுத்தவும் (shutdown) ஜெனரேட்டர் வாடகைக்கு 1 வருட மதீப்பீட்டு தொகை ரூ 2,36,000/- ஆகும். எனவே 1 வருட பராமரிப்பு பணி செய்ய மதீப்பீட்டு தொகை ரூ2,36,000/-க்கு பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்கான செலவின தொகை ரூ.236000/-னை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.** 906

11. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பழைய பேருந்து நிலையம் வணிக வளாகத்தை இடித்து விட்டு புதியதாக வணிக வளாகம் கட்டுவதற்கு முன்மொழிவுகள் அனுப்ப, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் தெரிவித்துதற்கிணங்க, மதிப்பீடுகள் தயார் செய்து உரிய ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தற்பொழுது அங்குள்ள பழைய வணிக வளாக கட்டிடத்தை இடிப்பதற்கு, உறுதி தன்மை சான்று (Stability Certificate ) பெற அரசு பொறியியல் கல்லூரி தர்மபுரி அவர்களிடமிருந்து ரூ.67260 க்கு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பட்டியல் தொகை வழங்கி வணிக வளாகத்தில் உறுதி தன்மை சான்று பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** 1 மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 907**

12. இந்நகராட்சி பகுதியில் 2021 முதல் 2024 வரை திட்டப்பணிகள் பணிகள் மேற்கொண்டமைக்கு பணிகளின் சுருக்கம் தினத்தந்தி செய்தி தாளில் 28.06.2024 ல் வெளியிடப்பட்டது.

இச்செய்தியினை தினத்தந்தி நாளிதழில் வெளியிடப்பட்டமைக்கு செலவின தொகை ரூ.8836/-க்கு பட்டியல் பெறப்பட்டுள்ளது. அத்தொகையினை தினத்தந்தி நாளிதழ் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** 1 மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 908**

13. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தலைமை சுத்திகரிப்பு நிலையத்தில் 500KVA ஜெனரேட்டர் உள்ளது. ஜெனரேட்டர் வாரம் இருமுறை இயக்கி நிறுத்தபட வேண்டும். மேற்படி ஜெனரேட்டரை இயக்காமல் இருந்தால் ஜெனரேட்டரில் உள்ள உதிரி பாகங்கள் பழுதாகும் என்பதால், ஜெனரேட்டரை வாரம் 2முறை இயக்கி நிறுத்த 10 லிட்டர் டீசல் தேவைபடுகிறது. எனவே 5 மாதத்திற்கான டீசல் 200 லிட்டர் தேவைப்படுகிறது. மற்றும் ஆற்று நீரேற்றும் நிலையத்தில் இயங்கி கொண்டு உள்ள 120 H.P டர்பைன் பம்பிற்கு 20 லிட்டர் 20/40 ஆயில் தேவைப்படுகிறது. மேற்படி டீசல் மற்றும் ஆயில் வாங்கி ஜெனரேட்டல், மற்றும் டர்பைன் மோட்டர் இயக்குவதற்கு மதீப்பீட்டு தொகை ரூ.30,000/- ஆகும். எனவே, மதீப்பீட்டு தொகை ரூ30,000/-ஐ குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்கான செலவின தொகை ரூ.30000/-னை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிஅளிக்கலாம்
3. ஏற்கனவே நகராட்சிக்கு விநியோகம் செய்கின்றஆயில் நிறுவனம் M/s.SRI BalaMurgan Agenciens இல்இருந்து நேரிடையாக கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு 1 , 2, மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 909**

14. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள மழைநீர் வடிகால் அடைப்பு ஏற்பட்டு மழைநீர் செல்ல வழியில்லாமல் பேருந்து நிலையத்திற்குள் மழைநீர் வருவதாகவும் இதனால் பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் மிகுந்த இடையூராக உள்ளது என துப்புரவு ஆய்வாளர் தெரிவித்துள்ளதற்கினங்க, இதன் மேல் உள்ள மூடு கற்கள் (Concrete slab) அமைக்கப்பட்டுள்ளது. எனவே, இதனை அப்புறப்படுத்தி மழைநீர் வடிகால் சுத்தம் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் அவர்கள் தெரிவித்துள்ளனர். எனவே, அதன் படி

மேற்கண்ட மழைநீர் வடிகால் மேல் உள்ள மூடு கற்களை இடித்து அப்புறப்படுத்தி மீண்டும் புதியதாக மூடு கற்கள் அல்லது Grill அமைக்க சிவசண்முகம்வீதி-2 இல் உடைந்து போன சிறு பாலம் மூடு கற்கள் புதிதாக அமைக்க மதிப்பீடு தொகை ரூ.4,00,000/-ஆகும். எனவே இச்செலவின தொகை ரூ4,00,000/-னை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு : 1.** . மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்கொண்ட பணியியை ஒப்பந்த புள்ளிகோரிவருவாய் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 910**

15. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19 கரட்டூர் ல் உள்ள நுன்உரம் செயலாக்க மையத்திற்க்கு உண்டான (மின் இணைப்பு எண் 307-002-838) 3ø மின் இணைப்பு சாலை ஓரத்தில் போக்கு வரத்துக்கு இடையூராக உள்ளது மற்றும் நுன் உரம் செயலாக்கமையத்திற்கும் மின் அளவு மானி உள்ள இடத்திற்க்கும் 30 அடி தூரம் உள்ளது. மேலும் மழைகாலங்களில் மின் மீட்டர் உள்ள இடத்தில் தண்ணீர் தேங்கும் அபாயம் உள்ளது ஆகவே மேற்கண்ட மின் இணைப்பை நுன்உரம் செயலாக்க மையத்திற்க்கு அருகில் 5x5 ரூம் அமைத்து இடமாற்றம் செய்ய மதிப்பீட்டு தொகை ரூ 65000/- ஆகும் மற்றும் 23.11.24 அன்று குப்பை கிடங்கில் ஏற்பட்ட தீவிபத்தில் நுன்உரம் செயலாக்க மையத்தில் உள்ள அமைனத்தும கேபிள்களும் தீயில் எரிந்து பழுதாகிவிட்டது . எனவே மின் அளவுமானி முதல் மெய்ன் சுவட்சு வரை 25 Sqmm 4 core cable 90 met மெய்ன் சுவிட்சு முதல் மோட்டார் & ஸ்டார்டர் வரை 35 SQM 4 core cable 50 Met பொருத்தி மோட்டார் இயக்குவதற்கு மதீப்பீட்டு தொகை ரூ 264500/- ஆகும். எனவே மொத்த மதீப்பீட்டு தொகை ரூ329500/-க்கு பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. 5x5 மின் அளவு மாணி ரூம் | ரூ. 10,000 |
| 2. 200A மெய்ன் சுவிட்சு 2 Nos | ரூ. 30.000 |
| 3. தமிழ்நாடு மின்சார வாரியம் | ரூ. 10,000 |
| 4. 7/16 காப்பர் வயர் 1 Coil (சர்வீஸ் ஒயர் | ரூ. 15,000 |
| 5. 35 Sqmm 4 core Cable 50 Met | ரூ. 102500 |
| 6. 25 Sqmm 4 core Cable 90 Met | ரூ. 162000 |
| மொத்தம் | ரூ.3,29,500 |

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்கான செலவின தொகை ரூ.329500/-னை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 911**

16. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் இயங்கி வரும் தமிழக முதல்வரின் காலை சிற்றுண்டி சமையல் அறைக்கு ISO 9001 : 2015 தரசான்றிதழ் பெற உரிய அரசு வழிமுறையின் படி, நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித்தலைவர் ஈரோடு அவர்கள் கோரியுள்ளதற்கிணங்க Quest Certification (P) LTD Chennai அவர்கள் ISO தரசான்று பணி உத்தரவு வழங்க கேட்டுள்ளார்.

எனவே ISO தரசான்று பணி உத்தரவு நகல் Quest Certification (P) LTD Chennai அவர்களுக்கு வழங்கவும், அதற்கான உத்தேச செலவின தொகை ரூ. 5500/-க்குமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காண் செலவின தொகை ரூ. 5500/-யை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 912**

17. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2023-2024ல் முத்து நகர் பகுதியில் (வார்டு எண்29 ) ரூ.3.30 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்க, 14.03.2024 ல் ஒப்பந்தபுள்ளிகள் கோரி, குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் அவர்களுக்கு 06.06.2024 அன்று வேலை உத்திரவு வழங்கி பணி நடைபெற்ற வருகிறது. இந்நிலையில் இப்பகுதியில் உள்ள திருமதி.கே.ராஜாமணி என்பவர் தனக்கு சொந்தமான காலியிடத்தின் வழியாக, மழைநீர் வடிகால் கொண்டு செல்லவும், அதற்கு தன்னுடைய காலியிடத்தில் தெற்கு புறம் அமைத்து தருமாறும் அதற்கு தனக்கு எவ்வித ஆட்சேபனை இல்லை எனவும், முத்திரைதாளில் எழுதி கொடுத்துள்ளார். எனவே, இவ்வழியாக, மழைநீர் வடிகால் கொண்டு செல்ல மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** 1 மன்றம் அனுமதி அளிக்கலாம்

**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 913**

18. இந்நகராட்சி அலுவலகம் தொடர்பான தொலைபேசி கட்டணங்கள், இணையதள வசதிக்கான கட்டணங்கள், தொடர்பான செலவினம் மேற்கொள்ள 2024-2025 ஆம் ஆண்டிற்கு உத்தேச மதிப்பாக ரூ.5.00 இலட்சத்திற்கு செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.6380/2002/டி1)

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 914**

19. நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.50977/2018/டிபி3 நாள்.07.03.2019 இல் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 இல் வெளியிடப்பட்டுள்ள நிலையில் உள்ளாட்சிகளில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்குவது தொடர்பாக விதி எண்.23 இன் படி தொழில் சார்ந்த வல்லுநர்கள் நியமனம் செய்தது குறித்து நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்காணும் சுற்றறிக்கை வரிசை எண்.6 இல் பரிசோதனை குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட விண்ணப்பதாரரிடம் ரூ.5000/- பதிவு கட்டணமாக பெற்றுக்கொண்டு

பதிவு செய்யலாம் என்றும் பதிவு செய்யப்பட்ட தொழில் சார்ந்த வல்லுநர்களின் பதிவேடு பராமரிப்பதுடன் விவரப்பட்டியலை ஒவ்வொரு ஆண்டும் புதுநிலைப்படுத்தி ஏப்ரல் மாதத்தில் மன்றத்தின் பார்வைக்காக வைக்க வேண்டும் மற்றும் அலுவல் சார்ந்த வலைதளத்தில் பதிவிட வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்காணும் அறிவுரையின் படி இந்நகராட்சியில் 2024-2025 நிதி ஆண்டு ஏப்ரல் மாத துவக்கத்தில் நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட பட வரைவாளர்கள் 60 நபர்கள் பதிவு செய்துள்ளனர் என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.670/2019/எப்1)

**அலுவலக குறிப்பு :-** மன்றம் பதிவு செய்யலாம்.

**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண். 915**

20. கோபிசெட்டிபாளையம் நகராட்சி ராமர் எக்ஸ்டென்சன் பகுதியில் அமைந்துள்ள எரிவாயு மயானம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்திட 10.09.2021 ந் தேதி முதல் 09.09.2024 ந் தேதி முடிய மூன்றாண்டு காலத்திற்கு அரிமா சங்கம், கோபிசெட்டிபாளையத்திற்கு உரிமம் வழங்கப்பட்டது. அதன்படி 09.09.2024 ந் தேதியுடன் மூன்றாண்டுகள் முடிவடைய உள்ளது. மேற்படி எரிவாயு மாயனத்தை மேலும் மூன்றாண்டுகளுக்கு (10.09.2024 முதல் 09.09.2027வரை) இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்திட உரிமம் வழங்குமாறு அரிமா சங்கம், கோபிசெட்டிபாளையம் அவர்கள் 05.07.2024 ஆம் தேதி விண்ணப்பித்துள்ளனர்.

உதவி வருவாய் அலுவலர் அவர்கள் தனது 11.07.2024 ஆம் தேதிய குறிப்பில் அரிமா சங்கம், கோபிசெட்டிபாளையம் என்ற நிறுவனத்திற்கு மேலும் மூன்றாண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு உரிமம் நீட்டிப் செய்யலாம் என தெரிவித்துள்ளார். எனவே உதவி வருவாய் அலுவலர் அவர்களின் குறிப்பின் படி அரிமா சங்கம், கோபிசெட்டிபாளையம் அவர்களுக்கு 10.09.2024 முதல் 09.09.2027 வரை எரிவாயு மயானம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்யும் உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 916**

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பழைய ஆஸ்பத்திரி வீதி ஆட்டிறைச்சி கடைஎண் 26 யை கோழி இறைச்சி கடையாக மாற்றி தரக்கோரி திரு. கே.வேலுச்சாமி என்பவர் மனு செய்துள்ளார். வருவாய் ஆய்வளார் தனது 10.07.2024 ந் தேதிய குறிப்பில் மேற்படி கடை பல முறை பொது ஏலம் விடப்பட்டும் இன்றுவரை எவரும் ஏலம் கோர முன்வராமல் காலியாக இருந்து வருகிறது. எனவே பழைய ஆஸ்பத்திரி வீதி ஆட்டிறைச்சி கடைஎண் 26 யை கோழி இறைச்சி கடையாக மாற்றம் செய்யலாம் என தெரிவித்துள்ளார் எனவே மேற்படி வருவாய் ஆய்வாளரின் குறிப்பின் படி பழைய ஆஸ்பத்திரி வீதி ஆட்டிறைச்சி கடைஎண் 26 யை கோழி இறைச்சி கடையாக மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதி மறுக்கப்பட்டது மன்றத்தீர்மான எண். 917**

22. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் தற்போது உள்ள அலுவலக கட்டிடம் 1952 ஆம் ஆண்டு முதல் நிலை நகராட்சியாக இருந்த போது கட்டப்பட்ட கட்டிடம் ஆகும் தற்போது இந்நகராட்சியானது தேர்வு நிலை நகராட்சியாக உள்ளது. மேலும் இனி வரும் காலங்களில் மக்கள் தொகை பெருக்கம் மற்றும் நகராட்சி விரிவாக்கம் போன்ற காரணங்களால் சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர வாய்ப்பு உள்ளது.தற்போது உள்ள நகராட்சி கட்டிடம் வாகனங்கள் நிறுத்துவதற்கும் பொது மக்கள் வந்து செல்லுவதற்கும் போதிய இட வசதி இல்லாமல் உள்ளது மேலும் கடந்த 06.07.2024 அன்று ஆய்வு பணிகள் மேற்கொள்ள வந்த நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் சென்னை, அவர்களால் நகராட்சி

அலுவலக கட்டிடத்தை ஆய்வு செய்து போதிய இட வசதி இல்லாததால் வேறு இடத்தில் கட்டுவதற்கு முன்மொழிவுகள் அனுப்புமாறு அறிவுறுத்தப்பட்டது .

நகர் மன்ற தலைவர், நகராட்சி ஆணையாளர், மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோர் புதிய நகராட்சி அலுவலக கட்டிடம் கட்ட இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடங்களை ஆய்வு செய்யப்பட்டதில் வார்டு – சி, மொடச்சூர் கிராமம், பிளாக் – 25, நகரளவை எண்.51 பு.ஹெக் 2.0625.0 பரப்பு (பு.ஏ. 5.9½ சென்ட்) பரப்புள்ள இடமானது நகரளவை ஆவணங்களில் சந்தை என வகைபாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள இடமாகும். மேற்படி இடமானது நகராட்சி அலுவலக கட்டிடம் கட்ட தேர்வு செய்யப்பட்ட இடமாகும். இக்கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் தொழில் நுட்ப அனுமதி பெற கட்டிட வரைபடம் தயார் செய்து திரத் தன்மை (Sfeblity Cerfiticate), Soil Cerfiticate மண் பரிசோதனை சான்று மற்றும் ABC படிவத்துடன் பதிவு பெற்ற பொறியாளர் மூலம் தயார் செய்து ஆன் லைன் வாயிலாக விண்ணப்பிக்கப்பட்டு கட்டிட அனுமதி பெற ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (    ந.க.எண்.1185/2024/F1)

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.** 918

23. கோபிசெட்டிபாளையம் வட்டத்திற்குட்பட்ட பாரியூர் கிராமம் வெள்ளாளபாளையம் க.ச.எண்.59/6 இல் அருள்மிகு முத்துகுமார சுவாமி திருக்கோவிலுக்கு சொந்தமான 5 ஏக்கர் நிலத்தை நகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளிக்காக ரூ.11,34,375/–(ரூபாய் பதினொன்று இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து முன்னூற்று எழுபத்தி ஐந்து மட்டும்) என்ற விலை கிரையம் நிர்ணயம் செய்து The Gobichettipalayam Co–Operative Urban Bank Ltd., Pay Order No.24889 நாள்.11.08.1999 இன் படி செலுத்தப்பட்டு கோபிசெட்டிபாளையம் நெ2 இணை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.9428 நாள்.13.08.1999 இல் கிரைய ஒப்பந்த உடன்படிக்கை செய்யப்பட்டது.

மேற்காணும் நிலத்தினை நகராட்சிக்கு கிரையம் செய்து பத்திர பதிவு அலுவலகத்தில் பதிவு செய்து தருமாறு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.4345/2005/எப்1 நாள்.01.10.2009 முதல் 03.05.2024 வரை அருள்மிகு முத்துக்குமார சுவாமி திருக்கோவில் செயல் அலுவலருக்கு பல நினைவூட்டுகள் அனுப்பப்பட்டது. இதனை தொடர்ந்து இந்து அறநிலைதுறை ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.145337/2023/எம்2 நாள்.19.03.2024 மற்றும் 21.05.2024 இல் மேற்படி இடத்திற்கு ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு 24 ஆண்டுகள் கடந்துவிட்டுள்ளதாக இந்நகராட்சியால் தெரிவித்துள்ளதின் பேரில் பரிசிலீனை செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இணை ஆணையர் இந்து சமய அறநிலை துறை ஈரோடு அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதனையடுத்து மேற்படி இடத்தினை ஆணையாளர் கோபிசெட்டிபாளையம் நகராட்சி என்ற பெயரில் 2 நெ இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய பதிவு கட்டணம் விவரம் கோரி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.4345/2005/எப்1 நாள்.10.06.2024 இல் கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி கடிதத்தை அடுத்து 2எண் இணை சார்பதிவாளர் அலுவலக கடிதம் ந.க.எண்.251/2024 நாள்.25.06.2024 இல் மேற்படி இடத்திற்கு சார்பதிவாளர் அலுவலக வழி காட்டி பதிவேட்டில் பா.வெள்ளாளபாளையம் கிராமம் சர்வே எண்.59/6 காலைக்கு மனை மதிப்பில் சதுர அடி ஒன்றுக்கு ரூ.100–/ (சதுர மீட்டர் ஒன்றுக்கு.ரூ.1080/–) என உள்ளது என்றும் இதன் அடிப்படையில் 5 ஏக்கருக்கும் மதிப்பு கணக்கிட்டு மொத்த மதிப்பிற்கு முத்திரை கட்டணம் 7% மும் பதிவு கட்டணம் 2% மும் செலுத்தப்பட வேண்டுமென 2எண் இணை சார்பதிவாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் படி கீழ் காணும் விவர அடிப்படையில் முத்திரை கட்டணம் மற்றும் பதிவு கட்டணம் செலுத்தப்படவேண்டும்

| வ.எண். | இடத்தின் அளவு ஏக்கர் /சதுரமீட்டர் /சதுரஅடி | கட்டண விவரம் | கட்டண தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 5 ஏக்கர்<br>(1ஏக்கர்–43560சஅடி)<br>5X43560 = 217800 ச.அடி X 100<br>21780000/– இதில், அதற்கு | முத்திரைக் கட்டணம் 7%<br>21780000 X 7% | 15,24,600 /– |
| | | பதிவுக்கட்டணம் 2%<br>21780000X2% | 4,35,600 /– |
| | | மொத்தம் | 19.60,200/– |

மேற்படி இடத்தினை நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி கட்டிடம் கட்டுவதற்காக வாங்கப்பட்டுள்ளதால் நகராட்சிக்கு கிரையம் செய்து பத்திரம் பதிவு செய்ய ஆகும் செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளலாம் என நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் மூ.மு,எண்.69436/2005/டிபி3 நாள். 08.04.2006 இல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு குறிப்பிடபட்டுள்ள மேலும் மேற்படி இடம் வாங்குவது குறித்து நகர்மன்ற தீர்மான எண்.323 நாள்.26.10.2005 இல் ஏற்கனவே நகர்மன்றத்தில் ஒப்புதல் பெறபட்டும் மேற்படி இடத்தினை பத்திர பதிவு செய்ய ஆகும் செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ள ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்.21 நாள்.30.05.2006 இல் நகர்மன்றத்தால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் மேற்படி இடத்தை ஆணையாளர் கோபிசெட்டிபாளையம் நகராட்சி என்ற பெயரில் பத்திரம் பதிவு செய்து கொள்ள அனுமதி வேண்டியும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அறிவுரையின் படியும் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ள பத்திரத் பதிவு செய்வதற்கான தொகை ரூ.19,60,200/– ஐ கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (ந.க.எண்.4345/2005/F1)

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 919**

24. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிராமம் வார்டு– D, பிளாக் –20 நகரளவை எண்.9/1,9/3,10/1,10/3,24/1,24/3,25/1,25/3, (பழைய க.ச.எண்.244/A,Bpt,245/1pt) இன் 1.95 ஏக்கர் மனையிடத்தில் ஒப்புதலளிக்கப்பட்ட கோபிசெட்டிபாளையம் விரிவு அபிவிருத்தி திட்ட எண்.7இல் விவசாய உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோக பகுதியாக நிலப் பயன்பாடு மாற்றம் செய்து தருமாறு மனுதாரர்களான திரு. V.R.R.சென்னியன்கிரி மற்றும் திரு.T.பழனிசாமி ஆகியோரால் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களுக்கு இணைய தள விண்ணப்ப எண்.B9FZZAXB/2024 நாள்.14.02.2024 இல் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் விண்ணப்பத்தினை தொடர்ந்து நகர் ஊரைமப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க்.எண்.658/2024–ஈமா2 (இணைய தள எண். B9FZZAXB/2024) நாள்.05.03.2024 இல் மேற்படி இடத்தினை ஒப்புதல் அளிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.7இல் விவசாய உபயோகத்திலிருந்து குடியிருப்பு பகுதியாக நிலப் பயன் மாற்றம் செய்ய பொது மக்களின் ஆட்சேபனை மற்றும் ஆலோசனை பெறுதல் தொடர்பான அறிவிப்பினை ஏதேனும் தினசரி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்து அதன் பின்னர் நகர் மன்ற தீர்மானம் பெற்று அனுப்பி வைக்குமாறு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதன் பின்னர் மேற்படி இடத்தினை ஆய்வு செய்யப்பட்டதில் மேற்படி இடமானது திரு.சென்னியன்கிரி த/பெ.ராமசாமி, மற்றும் பழனிசாமி த/பெ.தங்கமுத்துகவுண்டர் ஆகியோருக்கு பாத்தியப்பட்ட இடமாகும் இப்பகுதியில் நீர் வழி தடம் மற்றும் கொப்பு ஏதும் இல்லை இதில் பயிர் ஏதும் பயிரிடப்படாத தரிசு நிலமாகும் இந் நிலத்தின் மேற்கில் அணுகு பாதையாக பஞ்சாயத்து தார் சாலையாக உள்ளது கிழக்கு மற்றும் வடக்கில் தனியாருக்கு சொந்தமான தென்னந் தோப்பு உள்ளது. தெற்கில் தரிசு நிலமாக உள்ளது இதன் அருகில் பச்சமலை முருகன் கோவில் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் வீடுகள் மற்றும் தோட்டம் உள்ளது. மேற்படி பூமியிலிருந்து 200மீட்டர் தொலைவிற்குள் சுடுகாடு, மின்மாயனம் போன்ற இனங்கள் ஏதும் இல்லை.

நகர் ஊரைமப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண். 658/2024–ஈமா2 (இணையதள எண். B9FZZAXB/2024)நாள்.05.03.2024 இல் கோரியதற்கிணங்க கோபிசெட்டிபாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.7இல் மனுதாரர் மனையிடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.7இல் விவசாய உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோக பகுதியாக நிலப்பயன் மாற்றம் செய்ய பொது மக்களின் ஆலோசானை மற்றும் ஆட்சேபனை கோரி பொது மக்களுக்கு தெரியும் வகையில் 11.06.2024 அன்று தினகரன் தமிழ் தினசரி நாளிதழிலும் மற்றும் TRINITY MIRROR என்ற ஆங்கில தினசரி நாளிதழிலும் விளம்பரம் செய்யப்பட்டது

இதனை தொடர்ந்து 10.07.2024 உடன் பொது மக்களின் ஆலோசனை மறும் ஆட்சேபனை தெரிவிக்க கோரிய ஒரு மாத கால அவகாசம் முடிவடைந்தது. மேற்படி நில உபயோக மாற்றம் செய்வது தொடர்பாக பொது மக்களிடமிருந்தோ, ,அமைப்புகளிடமிருந்தோ எவ்வித ஆலோசனை மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை. எனவே மேற்காணும் விவரப்படியான விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.7இல் விவசாய உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோக பகுதியாக நிலப்பயன்பாடு மாற்றம் செய்வதற்கான கருத்துருவை நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களுக்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் வழியாக உரிய ஆவணங்களுடன் அனுப்ப மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (ந.க.எண். 447/2024/F1)
**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்
**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.** 920

25. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022–2023இல் நகராட்சி டவுன் நடுநிலைப்பள்ளி வளாகத்தில், ரூ. 194.30 இலட்சம் மதிப்பீட்டில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டும் பணி தற்பொழுது முடியும் தருவாயில் உள்ளது. இதற்கு தேவையான கனிணி மற்றும் மேஜைகள் நாற்காலிகள் கொள்முதல் செய்ய மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படவில்லை. 06.07.2024ல் ஆய்வு பணிகள் மேற்கொண்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் இப்பணிகளை கல்வி நிதியில் வாங்கி பயன்படுத்தி கொள்ளுமாறு தெரிவித்துள்ளார். எனவே, மேற்கண்ட பொருட்களை கல்வி நிதியில் வாங்கி பயன்படுத்தி கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.60 ஆகும் அச்செலவினைத்தினை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்
3. மேற்கண்ட பொருட்களை அரசு அனுமதி பெற்ற Gem Rate–இல் வாங்கி கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்

**அலுவலக குறிப்பு 1 ,2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.** 921

26. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022–2023இல் நகராட்சி டவுன் நடுநிலைப்பள்ளி வளாகத்தில், ரூ. 194.30 இலட்சம் மதிப்பீட்டில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டும் பணி தற்பொழுது முடியும் தருவாயில் உள்ளது. இதில் பேவர் பிளாக் அமைக்க மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டதைவிட கூடுதலாக செலவினம் ஏற்படுகிறது. மேலும் சுற்றுச்சுவர், வடிகால், போன்ற பணிகள் செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட பணிகள் செய்ய ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.9.50 இலட்சத்தினை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் ஒப்பந்த புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 922**

27. இந்நகராட்சியின் வார்டு எண்.3 ராமர் எக்ஸ்டன்னில் உள்ள இறந்தவர்களின் உடல்கள் மண்ணடக்கம் செய்யும் பகுதியில் முள்செடிகள், செடி கொடிகள், மரங்கள் போன்றவைகள் வளர்ந்து உடல்கள் அடக்கம் பண்ண முடியாத நிலை உள்ளது. அவ்விடத்தினை JCB மூலம் சுத்தம் செய்து கொள்ளவும் அதற்காகும் செலவினம் ரூ.10,000/– ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 0044 /2024/எச் 1)

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 923**

28. இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் தகுதி வாய்ந்த தூய்மை பணியாளர்கள் இதர பணியாளர்களுக்கு 2024 – 2025 ஆம் ஆண்டிற்கு வழங்க வேண்டிய சீருடை துணிகளை அரசு நிறுவனமான கோ ஆப்டெக்ஸ், ஈரோடு நிறுவனத்தில் அந்த நிறுவனத்தின் விலை விகிதத்தில் வாங்கி கொள்ளவும், தலைப்பாகை துணி காதி கிராப்ட், கோபிசெட்டிபாளையம் அவர்களிடம் வாங்கி கொள்ளவும், மேலும் அரசணையின்படி தையல் கூலி வழங்கவும் அதற்கான செலவினம் ரூ. 3.00/– இலட்சம் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனங்களிடம் மன்ற அனுமதி பெற்று சீருடை மற்றும் தலைப்பாகை துணிகளை கொள்முதல் செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1215/2024/எச் 1)

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 924**

29. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரவில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகளுக்கு தேவையான விழிப்புணர்வு பிளக்ஸ் போர்டுகள் கடந்த 15.05.2024 முதல் 01.07.2024வரை பல்வேறு விழிப்புணர்வு பணிகளுக்கு M/s. STROKE DIGITAL 5, முத்துஷா வீதி, கோபிசெட்டிபாளையம் ரூ.5320/−ற்கு விழிப்புணர்வு விளம்பர பலகைகள் தயார் செய்து பொது இடங்களில் அமைத்தும், முகாம் நடைபெறும் போது விளம்பர பதாகைகள், பொருத்தியும் பணிகளை அவ்வப்போது மேற்கொண்டதை மன்றம் அங்கீகரித்து அந்நிறுவனத்திற்கு கீழ்காணும் விபரப்படி தொகை வழங்க வேண்டியுள்ளது.

| வ. எ | பிளக்ஸ் தயார்செய்த தேதி | விபரம் | அளவு | எண்ணிக்கை | வழங்கப்பட வேண்டிய தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 15.05.2024 | பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை " தேசிய டெங்கு தினம் 2024" சமூகத்துடன் இணைந்து டெங்குவை கட்டுப்படுத்துவோம் என்ற Flex தயார் செய்த வகையில் | 4' X 3' | 2 | 700/− |
| 2 | 22.05.2024 | "கழிப்பிடம் செல்லும் வழி" என்ற Flex தயார் செய்த வகையில் | 2' X 2' | 2 | 400/− |
| 3 | 22.05.2024 | கழிப்பிடம் என்ற Flex (Pasting) செய்த வகையில் | 2' X 2' | 2 | 200/− |
| 4 | 07.06.2024 | நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம் " எனது குப்பை எனது பொறுப்பு " தீவிர தூய்மை பணிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் என்ற Flex தயார் செய்த வகையில் | 9' X 6' | 1 | 820/− |
| 5 | 07.06.2024 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 " எனது குப்பை எனது பொறுப்பு " தீவிர தூய்மை பணிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் என்ற Flex (Pasting) செய்த வகையில் | 9' X 6' | 1 | 200/− |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | 18.06.2024 | (Pasting)"தூய்மை இந்தியா திட்டம் 2.0 " எனது குப்பை எனது பொறுப்பு " தீவிர தூய்மை பணிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் என்ற Flex தயார் செய்த வகையில் | 6' X 4' | 2 | 1000/- |
| 7 | 25.06.2024 | பிளக்ஸ் பேனர் உலக புகையிலை எதிர்ப்பு தினம் " புகையிலை ஒரு உயிர்கொள்லி அதனை ஒருபோதும் உட்கொள்ளாதே" என்ற Flex தயார் செய்த வகையில் | 6' X 4' | 2 | 1000/- |
| 8 | 01.07.2024 | "தூய்மையாக இருங்கள் நோயின்றி இருங்கள்" பாரத இயக்கம்" என்ற Flex தயார் செய்த வகையில் | 6' X 4' | 2 | 1000/- |
| மொத்தம் | | | | 13 | ரூ. 5320/- |

மேற்படி தொகையினை M/s. STROKE DIGITAL 5, முத்துஷா வீதி, கோபிசெட்டிபாளையம் அவர்களுக்கு வழங்கிட மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண். 648 /2023/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 925**

30. இந்நகராட்சியின் எரியூட்டும் இயந்திரத்தில் பொருத்தப்பட்டுள்ள தண்ணீர் மோட்டாருக்கும் Shreading Machine-க்கும் MCC மையத்தின் எலக்ட்ரிக் Box-லிருந்து செல்லும் மின்சார ஒயர்களை பணியாளர்களின் பாதுகாப்பு கருதி மூன்று இடங்களில் Post அமைத்து தரையில் ஒயர்கள் படாதவாறு தேவைப்படும் ஒயர்களை கொண்டு எலக்ட்ரிக் வேலைகள் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.12000/-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1217/2024/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 926**

31. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட 30 வார்டுகளில் உள்ள தெருக்கள், ரோடுகள் போன்றவற்றில் அவ்வப்போது வளரும் புல்செடிகள் பணியாளர்கள் மூலம் அகற்றுவதில் சிரமம் உள்ளதால் நான்கு எண்ணிக்கை (Bush Cutters Machine) புல் அறுக்கும் இயந்திரம் புதியதாக கொள்முதல் செய்து பணி மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.75,000/- ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1214 /2024/எச்1)

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 927**

32. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய வணிக வளாகத்தினை இடித்து புதிதாக ரூபாய்.152 இலட்சம் மதிப்பீட்டில் கட்டிடம் கட்டுவதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்திற்கு வரைபடம் தயார் செய்து ஆன் லைன்னில் விண்ணப்பம் செய்தும் அதற்கான மாதிரி வரைபடம் தயார் செய்தும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களால் ஆய்வு செய்து தொழில் நுட்ப ஒப்புதல் பெற்று தருமாறு பொறியர் பிரிவு ந.க.எண்.2532/2022/இ2 நாள்.24.06.2024 இல் ஆணையர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது

எனவே மேற்படி கட்டிடத்திற்கு வரைபடங்கள் தயார் செய்யவும், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் ஒப்புதல் பெற கட்டணங்கள் செலுத்தவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1257/2024/எப்1

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்
**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 928**

33. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மொடச்சூர் கிராமம், வார்டு C, பிளாக் 17, நகரளவை எண் 3/5, பழைய கா.ச.எண்.91ல், உள்ள 1250 ச.மீ ,(30 சென்ட்) மனையிடத்திற்கு குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி வழங்குமாறு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களுக்கு திரு. ஆர். பி. சண்முகம் என்பவர் இணைய வழியாக இணையதள விண்ணப்ப எண் 8UM19GO0/2023/TCP நாள் 06.12.2023 இல் விண்ணப்பிக்கப்பட்டது. இதனையடுத்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் குடியிருப்பு மனைப்பிரிவின் திட்ட அனுமதி உத்தரவு எண். 8UM19GO0/2023/TCP. நாள் 15.12.2023 இல் SWP/DTCP/ERODE/LAYOUT APPORVAL NO.523/2023 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்ட அனுமதி அளிக்கப்பட்டத்தையடுத்து ஆவணங்கள் சரிபார்த்தும் உரிய கட்டணங்கள் வசூல் செய்தும் இறுதி ஒப்புதல் வழங்குமாறு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது. இதனையடுத்து மேற்படி மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகளை நகராட்சிக்கு தானமாக ஆவண எண் 4243/ 2023 நாள் 12.12.2023 அன்று கோபிசெட்டிபாளையம் நெ.1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆணையாளர் கோபிசெட்டிபாளையம் நகராட்சி என்ற பெயரில் பத்திரம் பதிவு செய்து அசல் பத்திரத்தை நகராட்சிக்கு மனுதரரால் ஒப்படைக்கப்பட்டது, மேலும் மேற்படி சொத்து குறித்து வில்லங்கச் சான்றிதழ் மற்றும் நகராட்சி வழக்கறிஞரின் சட்டக் கருத்துருவில் எவ்வித வில்லங்கமும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவிற்கு உரிய கட்டணங்களை செலுத்தக்கோரி இவ்வலுவலக கடிதம் ந.க.எண் 2861/2023/எப்1, நாள் 04.04.2024 இல், மனுதாருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதையடுத்து மனுதாரரால் கீழ்காணும் விபரப்படி மனைப்பிரிவு கட்டணங்கள் அனைத்தும் செலுத்தப்பட்டுள்ளது.

| வ.எண் | மனைப்பிரிவு கட்டண விபரம் | கட்டணம் ரூபாய் | இரசீது எண் மற்றும் நாள் |
|---|---|---|---|
| 1. | மனைப்பிரிவு அமைப்புக் கட்டணம் | ரூ. 30,000 | 0002129 நாள் 21.05.2024 |
| 2. | மனைப்பிரிவு கட்டணம் | ரூ. 1000 | |
| 3. | மனை அபிவிருத்தி கட்டணம் | ரூ.2,500 | |
| 4. | கூராய்வு கட்டணம் | ரூ.4000 | 0002130 நாள் 21.05.2024 |
| 5. | சாலை பராமரிப்பு வைப்புத் தொகை | ரூ.35,000 | 0002132 நாள். 21.05.2024 |
| 6. | நில உபயோக மாற்றுக் கட்டணம் | ரூ.5000 | 0003225 நாள் 11.06.2024 |

மேற்காணும் மனைப்பிரிவில் அமைந்துள்ள பொது ஒதுக்கீடுகளான சாலைகள், மழை நீர் வடிகால், குடிநீர் குழாய் பதித்தல், மற்றும் தெருவிளக்கு அமைத்தல் போன்ற பணிகள் குறித்த விபரங்களை கீழ்காணும் விபரப்படி 16.07.2024 மற்றும் 19.07.2024 ஆம் நாளிட்ட பொறியர் பிரிவு குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 12843/2022 TP2 நாள் 20.10.2022 இல் குறிப்பிட்டுள்ளபடி சாலை மற்றும் வடிகால் அமைக்க மதிப்பீட்டுத் தொகை ரூ.4,00,000 (நான்கு இலட்சம்) செலுத்தக்கோரி மனுதாருக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண் 2861/2023/எப்1 நாள் 16.07.2024 இன் படி அனுப்பப்பட்டு மனுதரரால் ரூ.4,00,000 (நான்கு இலட்சம்) நகராட்சி கருவூலத்தில் இரசீது எண் 0007117. நாள் 18.07.2024 இல் செலுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தொகையை மனுதாரரால் நகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளதால்

மேற்படி பணிகளை நகராட்சியால் மேற்கொள்ளபடவேண்டும் என்றும் நகராட்சியால் மேற்படி பணிகளை மேற்கொள்ளப்பட உள்ளதால் மூன்றாம் நபர் தரச்சான்று தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது 2. மேற்படி மனைப்பிரிவில் ஏற்கனவே தெருவிளக்கு மற்றும் குடிநீர் வசதி அமைக்கப்பட்டுள்ளது.என்றும் எனவே புதிதாக மேற்காணும் வசதிகள் அமைக்கப்பட தேவையில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்காணும் மனைப்பிரிவில் உள்ள மனையிடங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக உட்பிரிவு செய்தும் நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பொதுஒதுக்கீட்டிற்கும் ஆணையாளர் கோபிசெட்டிபாளையம் நகராட்சி என்ற பெயரில் உட்பிரிவு செய்தும் கோபிசெட்டிபாளையம் வருவாய் வட்டாச்சியர் அவர்களின் உத்தரவு டி.ஆர்.என். 2024 /10/31/000490 S.D நாள் 03.01.2024 மற்றும் டி.ஆர்.எண். 2024/10/31/000502S.D நாள்.13.03.2024 ஆகியவற்றில் உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் உத்தரவின் படியும் 19.07.2024 ஆம் நாளிட்ட பொறியர் பிரிவின் குறிப்பின் படியும் மனுதாரரால் மனைப்பிரிவிற்கான அனைத்து கட்டணங்களும் செலுத்தப்பபட்டுவிட்டதாலும் மொடச்சூர் கிராமம், வார்டு C, பிளாக் 17, நகரளவை எண் 3/5, பழைய கா.ச.எண்.91ல், உள்ள 1250 ச.மீ (30 செண்ட்) திட்ட அனுமதி உத்தரவு எண். 8UM19GO0/2023/TCP. நாள் 15.12.2023 இல் SWP/DTCP/ERODE/LAYOUT APPORVAL NO.523/2023 என எண்ணிடப்பட்டும் மேலும் மேற்படி உத்தரவில் குறிப்பிட்டுள்ள பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டும் இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்டுகிறது (ந.க.எண் 2861/2023/எப்1)

**சிறப்பு நிபந்தனை**

இம்மனைப்பிரிவில் வடிகால் கழிவு நீர் செல்வது தொடர்பாக பொதுபிரச்சனை ஏற்படும் பட்சத்தில் மனைப்பிரிவு உரிமையாளரே தமது சொந்த பொறுப்பில் தீர்வு செய்து கொள்ள வேண்டும். இது நகராட்சியை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.** 929

34. இந்நகராட்சியில் உள்ள 30 வார்டுகளில் தினமும் சேகரிக்கப்படும் மக்காத கழிவுகளில் மறுசுழற்சிக்கு பயன்படாத பிளாஸ்டிக் கழிவுகள் அவ்வப்போது சிமெண்ட் ஆலைகளுக்கு மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இந்நிலையில் சிமெண்ட் ஆலைக்கு அனுப்பப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் உள்ளிட்ட இதர கழிவுகளில் விற்பனைக்கு உகந்த கழிவுகளை விருப்பம் உள்ள கடைக்காரர்கள்/ பழைய பிளாஸ்டிக் விற்பனை செய்பவர்கள் போன்றவர்களிடம் 01.08.2024 முதல் ஓராண்டு காலத்திற்கு ஒப்படைத்து கழிவுகளை அப்புறப்படுத்தும் பணிக்கு 22.07.2024 அன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | நிறுவனம் | சமர்பித்துள்ள விலைப்புள்ளி விலை விகிதம் (1 டன்னிற்கு 1000 kg விற்கு) |
|---|---|---|
| 1 | **Kalyani Old paper Mart, 24, Jeevanandam street, Kuyavan thittu,Erode** | **ரூ. 825/-** |
| 2 | **M/s. Mathesh & Co 976, Nethaji Road, Erode – 1.** | **ரூ. 1000/-** |
| 3 | **Sri Palani Murugan Metals, Old Plastic and Paper Merchant, Nataraj Theater Road, Erode** | **ரூ. 900/-** |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2 ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s. Mathesh & Co, 976, Nethaji Road, Erode –1 என்பவரது விலை விகிதம் மற்றவைகளை விட கூடுதலாக உள்ளதால் அவரது விலை விகிதத்தினை ஏற்று அவரிடம் உத்திரவு வழங்கும் நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு அவ்வப்போது ஒப்படைத்து பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1113 / 2024/எச்1)

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. இப்பணியின் மூலம் கிடைக்கப்பெறும் தொகையினை சிமெண்ட் ஆலைக்கு கழிவுகள் அனுப்பும் வாடகை லாரிக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடும் தொகை பற்றாக்குறை இருக்கும் நேர்வில் இத்தொகையினை செலவிட்டு கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 930**

35. இந்நகராட்சி பகுதியில் உள்ள 30 வார்டுகளில் தினமும் சேகரமாகும் பிளாஸ்டிக் மற்றும் எரியும் தன்மையுடைய கழிவுகள் (சிமெண்ட் ஆலைகளின் மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு உகந்த) அனைத்தும் இந்நகராட்சியின் RRC மையங்களில் சேமித்து வைத்து அக்கழிவுகள் அவ்வப்போது தேக்கமின்றி திடக்கழிவு, பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 –ன் படி சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்ப வேண்டி உள்ளது. எனவே லாரிகளை வாடகைக்கு விநியோகம் செய்யும் ஒப்பந்ததாரர் மூலம் இப்பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்.2861/2023/எச்1

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுசுகாதார பிரிவினரால் திடக்கழிவு மற்றும் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 –ன் படி வசூலிக்கப்படும் அபராத கட்டணங்களின் தொகை அல்லது திடக்கழிவு பயனீட்டாளர் கட்டணத்திலிருந்து (Solid Waste Management User Charge) செலவு செய்து கொள்ளவும், அத்தொகையில் இருப்பு இல்லாத நேர்வில் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 931**

36. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 30 வார்டு பகுதிகளிலும், வீடுவீடாக சென்று கொசுப்புழு தடுப்பு மருந்தான அபேட் தெளிக்கும் பணி, கொசு புழுக்கள் உற்பத்தியாகும் இடங்களை அழித்தல், டெங்க நோய் பரவும் விதம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த புகை மருந்து தெளிக்கும் பணிகளை மேற்கொள்ள தினமும் 37 DBC பணியாளர்களை விநியோகம் செய்ய M/s. TRUSTUS OUT SOURCING SOLUTIONS PVT LTD, Plot No. 117, D.No. 2, 28 th Street, Balaji Nagar, Chennai – 91 நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தகாலம் 31.07.2024 ஆம் தேதியுடன் முடிவடைகிறது. எனவே நோய் தடுப்பு பணிகளின் அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் 01.08.2024 ஆம் தேதி முதல் 31.08.2024 வரை ஏற்கனவே வழங்கி வரும் அதே ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்தில் தொடர்ந்து மேற்படி நிறுவனத்திடமிருந்து DBC பணியாளர்களை பெற்று நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் ரூ. 5.50/– மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1018 /2024/எச்1)

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட்டு கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 932**

37. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் சத்தி ரோடு மேல்நிலை தொட்டி வளாகத்தின் கிழக்கு பகுதியில் அடைந்துள்ள பூங்காவின் உள்பகுதியில் நாய்களுக்கான கருதடை மையம் (ABC) அமைந்துள்ளது மற்றும் கருதடை செய்யப்பட்ட நாய்களை பராமரிக்க தேவையான அறைகளும் அமைந்துள்ளது.

இந்நிலையில் கருதடை செய்யும் மருத்துவர்களுக்கு தேவையான டேபிள் மற்றும் மருத்துவர்கள் கருதடை செய்ய பயன்படுத்தும் உபகரணங்கள் வைக்கும் தேவையான வசதிகள் செய்து தர கேட்டு கொண்டுள்ளனர்.

மேலும் அதிகபடியான நாய்கள் கருத்தடை செய்ய வருதால் கூடுதலாக நாய்கள் பராமரிப்பு அறைகளும் அதன் அருகாமையில் உள்ள கட்டிடத்தை மராமத்து பணிகள் மேற்கொண்டு புதிதாக மாற்றி அமைத்தல், மின்வசதி, தண்ணீர் வசதி போன்ற பணிகள் மேற்கொள்ள ஆகும். மதிப்பீட்டு தொகை ரூ.10,00 (இலட்சம்)ஆகும். மேற்படி செலவினத்தை நகர் நலன் கருதி தன்னார்வலர் கொண்டு பணி மேற்கொள்ளவும், பணியை நகராட்சி பொறியாளர் மேற்பார்வையில் பணி மேற்கொள்ள்வும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 581/2024/E1

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி அளிக்கலாம்.**

**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 933**

(ஒப்பம்)–என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

/ உண்மை நகல்/

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி